காலை முரசு
பக்கங்கள் 20

## இறப்பர் தோட்டத்தில் ஆணின் சடலம் மீட்பு!

இறப்பர் தோட்டத்தில் இருந்து 40 – 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது

பசறை – பிபிலை வீதியில் 13 ஆம் கட்டை 30 ஏக்கர் பகுதிக்குச் செல்லும் வீதியில் கீழ் பகுதியில் உள்ள இறப்பர் 04

முழக்கம்: 01 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 06 புதன்கிழமை 19.06.2024 அதிர்வு 323



# ஒற்றையாட்சியை ஒழிக்கத் தயாரா? சமஷ்டியைக் கொண்டுவர முடியுமா?

## நாடாளுமன்றில் ஜனாதிபதியிடம் கஜேந்திரன் கேள்விக்கணை

(ந.லோகதயாளன்)

இலங்கையில் ஒற்றையாட்சியை ஒழித்து சமஷ்டி அரசியல் யாப்பைக் கொண்டு வர முடியுமா என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். 04

# சஜித் அணியுடன் டலஸ், தயாசிறி



நாடாளுமன்ற உறுப்பினர்களான டலஸ் அழகப்பெரும மற்றும் தயாசிறி ஜயசேகர ஆகியோர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் விரைவில் இணையக்கூடும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் எம்முடன் இணைந்துள்ளனர். ஏனைய எம்.பிக்களுடனும் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. எதிர்காலத்தில் அவர்கள் கூட்டணியில் இணைவார்கள் என நம்புகின்றோம். 04

# பிரதீபனின் வீட்டின் மீது தாக்குதல்: மூவர் சந்தேகத்தில் நேற்று கைது!

(என். புவியரசன்)



ஊடகவியலாளர் த.பிரதீபனின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் மூவர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் அச்சுவேலியில் ஊடகவியலாளர் த.பிரதீபனின் இல்லத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், ஓட்டோ மற்றும் வீட்டில் இருந்த உடமைகளுக்கு 04




தனது அரசியல் வாழ்வில் 90 வீதமான காலத்தை நாடாளுமன்ற உறுப்பினராகக் கழித்தவர் ரணில் விக்கிரமசிங்க. 1977 முதல் 45 வருடங்கள் எம்.பியாக இருந்தவர். இப்போது கடந்த இரண்டு வருடங்களாக ஜனாதிபதியான பின்னரும், நாடாளுமன்ற நினைப்பு அவரை விடுவதாக இல்லை. 02



# பெண்களின் உரிமைகளை வெல்வதில் அரசாங்கம் மிகவும் உறுதியாக உள்ளது

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



“ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கும் இருக்க வேண்டும் எனபது சர்வதேச பெண்கள் அமைப்புகளின் அனைத்து உடன்படிக்கைகளிலும் உள்ளடங்கியுள்ளது. நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை அல்லது எந்தவொரு நிறுவனமும் அந்த நடவடிக்கைகளில் தலையிட முடியாது. ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெண்க

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய மறுசீரமைப்பின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பிராந்திய அமைப்பாளர்களுக்கான நியம

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

:ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட புதிய பிராந்திய அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வில் இன்று கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆண், பெண் சமத்துவச் சட்டமூலம் குறித்து நாடாளுமன்றத்தில் இன்று நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. ஆனால் அதுதொடர்பில் கிடைத்துள்ள உயர் நீதிமன்றத் தீர்ப்பின்படி பெண்களுக்கு சம உரிமை இல்லை. நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையான பெண்களால் அந்த உரிமையைப் பெற முடியாது என்பது, இந்த நாட்டின் நாடாளுமன்றத்திற்கும் அரசமைப்பிற்கும் எதிரான தீர்மானமாகவே கருத முடியும் என நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தேன்.

ஆண்களுக்கு நிகரான உரிமைகளை பெண்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம். சர்வதேச பெண்கள் அமைப்புகளின் அனைத்து ஒப்பந்தங்களிலும் இது சேர்க்கப்பட்டுள்ளது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் நீதித்துறை, நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை அல்லது வேறு எந்த அமைப்பும் தலையிட முடியாது.

அந்தப் பணியை நிறைவேற்ற உறுதி பூண்டுள்ளோம். எனவே இது தொடர்பில் அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என இன்று நான் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தேன். அதேபோன்று, அந்தத் தீர்மானத்தினால் பௌத்த மதத்தின் பாதுகாப்பு நீக்கப்படலாம் என்பதால் அந்தக் கருத்தை ஏற்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது நாம் அதுகுறித்து அவதானம் செலுத்தி செயற்பட்டு வருகிறோம்.”– என்றார்.

### இரகசியம் பரகசியம்...

அடிக்கடி நாடாளுமன்றத்துக்கு வந்து, எதிரணி எம்.பிக்களின் வசை பாடலுக்கு முகம் கொடுக்காவிட்டால் அவருக்கு விடிவதில்லைப் போலும். அப்படி வருகின்ற நாள்களில் எல்லாம் நாடாளுமன்றத்தில் அவர் உரையாற்றவும் தவறுவதில்லை.

இலங்கையில் இதுவரை பதவியில் இருந்த ஜனாதிபதிகளில் கூடுதல் நேரத்தை நாடாளுமன்ற அமர்வுகளிலும் உரைகளிலும் செலவிட்டவர் அவர்தான்.

பெரும்பாலும் நாடாளுமன்றம் கூடும் நாள்களில் எல்லாம் நாடாளுமன்றத்தில் உள்ள ஜனாதிபதி அலுவலகத்தில் வந்து அமர்ந்து காரியமாற்றுவார். அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அச்சமயம் அவரைச் சந்திக்க இலகுவாக வாய்ப்புக் கிடைக்கும்.

பாலின சமத்துவ சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாக அவர் நேற்று நாடாளுமன்றத்தில் காட்டமாக கூறிய வார்த்தைகள் சர்ச்சைக்குரியவை. உயர் நீதிமன்றத்தை அச்சுறுத்தும் வகையிலான கருத்துக்கள் அவை.

மனிதனே மனித இறைச்சியைச் சாப்பிட்டால் அதனை நரமாமிசம் புசிப்பவன் என்று கூறுவர். உயர்நீதிமன்றம் நரமாமிசம் புசிப்பது போன்று செயற்பட்டிருப்பதாக ஜனாதிபதி நேற்றுக் குறை சொல்லி இருக்கின்றார்.

நேற்று அவர் நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்த போதும் சுமந்திரன் அவருக்கு சுடுவது போல நாசூக்காக ஒரு ஷொட் வைத்தார்.

“நானும் ஜனாதிபதியும் மார்ச் மாதத்தில் ஒரு கூட்டத்தில் பங்கு பற்றினோம். அது பற்றிய தமது எக்ஸ் தளப் பதிவில் ஜனாதிபதி பின்வருமாறு குறிப்பிட்டு இருந்தார்:– ‘நான் சர்வதேச நாணய நிதிய யோசனைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பங்குபற்றக் கட்சித் தலைவர்களை அழைத்திருந்தேன். திறந்த விவாதங்களை நான் எப்போதும் வரவேற்பவன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுமந்திரன் உட்பட பல தலைவர்கள் பங்குபற்றினர். நாணய நிதியத்தின் தொழில்நுட்ப உதவி அறிக்கைகளை சுமந்திரன் கோரினார். நான் அவற்றைத் தமிழ் கூட்டமைப்புக்கும் நாடாளுமன்றத்துக்கும் வெளியிடுவேன் என உறுதி அளித்தேன்.’ – என்று ஜனாதிபதி தமது டுவிட் செய்தியில் குறிப்பிட்டிருந்தார். நேரிலும் அக்கூட்டத்தில் வைத்து எங்களுக்கும் அதைக் கூறி இருந்தார். நாடாளுமன்றுக்கு வந்தும் அதை ஜனாதிபதி கூறினார். ஆனால் அவர் அப்படி கூறி மூன்று மாதங்கள் கடந்து விட்டன. இன்று வரை அந்த அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. ஆகவே நான் மிகவும் சிரத்தைக்குரிய விடயத்தைச் சுட்டுகிறேன். ஜனாதிபதியாக நீங்கள் எங்களுக்குச் செய்வீர்கள் என்று வாக்குறுதி அளித்து செய்யாமல் போன விடயங்களின் மிக நீண்ட பட்டியலில் இந்த விடயத்தையும் சேர்த்துக் கொண்டு விடக் கூடாது” – என்ற சாரப்பட சூடாகக் கொடுத்தார் சுமந்திரன்.

அச்சமயம் நாடாளுமன்றத்தில் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கு பதில் ஏதும் கூறவில்லை. பின்னர் அவர் சபையில் இருந்து வெளியேறிவிட்டார்.

அதற்கு முன்பதாக, உயர் நீதிமன்றத்துடன் முரண்டு பிடித்து ஜனாதிபதி ரணில் ஆற்றிய உரை தொடர்பில் சுமந்திரன் தமது உரையில் ஜனாதிபதிக்கு ஓர் ஆலோசனை கூறினார்.

“ஜனாதிபதி கூறுகின்றமை போல உயர்நீதிமன்றம் இந்தச் சட்டமூல விடயத்தில் தவறிழைத்திருக்கின்றது என்றால் அதற்காக உயர்நீதிமன்றத்துடன் முரண்டு பிடிக்கத் தேவையில்லை. இதே சட்டமூலத்தை சில திருத்தங்களுடன் மீண்டும் புதிதாக உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பலாம். மேலும் அதிக நீதியரசர்களைக் கொண்ட ஆயத்தின் முன்னால் அதைப் பரிசீலிக்கும்படி முழு நாடாளுமன்றமும் உயர்நீதிமன்றத்தைக் கோரலாம். இப்படி உயர்நீதிமன்றத்துடன் முரண்டு பிடிக்காமல் விடயத்தை கையாள முடியும்.” – என்று ஆலோசனை கூறினார் சுமந்திரன்.

அப்படி ஒரு வழி இருந்தால் அதைச் செய்யலாம் என்று குறிப்பிட்டு, உயர்நீதிமன்றுக்கு எதிரான தன் சீற்றத்தை நாடாளுமன்றத்தில் சற்றுத் தணித்துக் கொண்டார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.



# 2022-2024 வரையான காலப்பகுதியே அதிகளவு சட்டங்கள் தயாரிக்கப்பட்டன

## நீதி, சிறைச்சாலை, அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் தகவல்

இலங்கையில் அதிகளவில் சட்டம் தயாரிக்கப்பட்ட ஆண்டுகளாக 2022-2024 வரையான காலப்பகுதி வரலாற்றில் பதியப்படும். 2022 ஆம் ஆண்டு முதல் 59 சட்டச் சீர்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு, 7 சட்டமூலங்களும் 44 திருத்தச் சட்டங்களும் எதிர்வரும் நாள்களில் நிறைவேற்றப்பட உள்ளன."

– இவ்வாறு நீதி, சிறைச்சாலை மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நீதி, சிறை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சு கடந்த இரண்டு ஆண்டுகளில் சட்டச் சீர்திருத்தங்கள் தொடர்பாக பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்தக் காலப்பகுதி வரலாற்றில் இடம்பிடிக்க வேண்டிய தாகும்.

எமது அமைச்சின் விடயப்பரப்பிற்கு அமைய, 2022 இல் - 29, 2023 இல் - 17, 2024 இல் - 13 என இதுவரை 59 சட்டச் சீர்திருத்தங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 7 வரைவுகள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இன்னும் 44 மிக முக்கியமான சட்டத் திருத்தங்களுக்கான பணிகள் கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் உள்ளன. ஒவ்வொரு அமைச்சின் சட்டங்களை வகுப்பதிலிலும் நீதி அமைச்சு பெரும் பங்காற்றுகிறது.

அதன்படி, சட்ட வரைவுத் திணைக்களம், மற்றைய அமைச்சுக்களுக்காக 2022 ஆம் ஆண்டில் 273 சட்ட வரைவுகளையும், 2023ஆம் ஆண்டில் 299 சட்ட வரைவுகளையும் மும்மொழிகளிலும் தயாரித்துள்ளது.

நீதித்துறையை செயற்றிறன் மிக்கதாக மாற்றுவதன் மூலம் மக்கள் வழக்குகளை விரைவாக நிறைவு செய்ய முடியும். வழக்கு தொடர்பான சொத்துக்களை பொருளாதார வளர்ச்சிக்கு பயன்படுத்தலாம். மேலும் நல்ல முதலீட்டுச் சூழல் உருவாகி வருகிறது. எனவே, சட்டத்தின் தாமதத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் நேரடி தொடர்பு இருப்பது தெளிவாகிறது.

2017 ஆம் ஆண்டில் சட்ட விவகாரங்களுக்கான துறைசார் மேற்பார்வைக் குழு வழங்கிய அறிக்கையின்படி, ஒரு குற்றவியல் வழக்கை முடிக்க பொதுவாக 17 ஆண்டுகள் ஆகும். பல்வேறு ஆய்வுகளின்படி, ஒரு நிலம், பகிர்வு மற்றும் கணக்கீட்டு வழக்கை முடிக்க ஒரு தலைமுறைக்கு மேல் ஆகும் என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையை மாற்றுவதற்கு தேவையான செயற்பாடுகளைத் திட்டமிட்டுள்ளோம்.

அதற்கான முக்கிய தீர்வாக நீதித்துறையை டிஜிட்டல் மயமாக்க வேண்டியுள்ளது. அதேபோல் மேலும் பல மாற்றங்களும் அவசியப்படுகின்றன. அதற்கான ஏற்பாடுகள் பல தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன.

42 ஆண்டுகளுக்குப் பிறகு, அரசமைப்புச் சட்டத் திருத்தத்துடன், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 14 ஆக அதிகரிக்க முடிந்துள்ளது. கடினமான பொருளாதார சூழ்நிலையிலும், கடந்த 2 ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக 76 நீதித்துறை அதிகாரிகள் சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர். மேலும், இரண்டு தடவைகளில் 34 பேர் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக பதவி உயர்வு பெற்றுள்ளனர். இதன் காரணமாக நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், புதிய நீதிமன்றங்களை நிர்மாணிக்கவும் முடிந்தது.

இந்த காலகட்டத்தில், உயர் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை அறைகளின் எண்ணிக்கை 3 இலிருந்து 5 ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிமன்ற அறைகளின் எண்ணிக்கை 5 இலிருந்து 10 ஆகவும் அதிகரிக்கப்பட்டன. மேலும், உயர் நீதிமன்றம் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளமை சட்டத்தரணிகள் மற்றும் மக்களுக்கு பயனளிப்பதாக அமைந்துள்ளது.

மேலும், வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கு எளிதாக வர்த்தகம் செய்யும் குறியீட்டில் முதலிடம் பெற வேண்டியது அவசியமாகும். வர்த்தகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மேல் மாகாணத்தில் 4 வர்த்தக மேல் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. அதேபோல் அதிகமான வர்த்தக மேல் நீதிமன்றங்களை நிறுவுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், துறைமுக நகர திட்டத்துடன் உருவாக்கப்பட்ட புதிய முதலீட்டுச் சூழ்நிலைக்கு, முதலீட்டாளர்களின் பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க முதலீட்டு நீதிமன்றத்தை நிறுவுவதற்குத் தேவையான சட்டச் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஒரு சாதகமான முதலீட்டு சூழலை உருவாக்குவதற்கான செயலணி ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு சிவில் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் வழக்கு விசாரணைகளை விரைவாக மேற்கொள்ள முடிந்துள்ளது. எதிர்காலத்தில், தனியொரு நீதிபதியின் கீழ் முன்னைய வழக்குகளையும் விசாரணை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.


மாவட்ட நீதிமன்றங்களில் குவியும் வழக்குகளில் கிட்டத்தட்ட 30 வீத பணம் தொடர்பான வழக்குகளாகும். இதன் மூலம் நீதிமன்றங்களுக்கு வரும் பணம் தொடர்பான வழக்குகளின் அளவைக் குறைக்க, சமாதான நீதவான் சபைகளின் எல்லை 10 லட்சம் ரூபாய் வரை விரிவாக்கப்பட்டுள்ளது."– என்றார்.

# வவுனியாவில் நில அதிர்வா?

வவுனியா மாவட்டத்தின் சில இடங்களில் நேற்று ஏற்பட்ட அதிர்வு நிலநடுக்கமா என்பது பற்றி ஆராயப்படுகின்றது.

வவுனியா மற்றும் பதவிய பகுதிகளில் இந்த அதிர்வு உணரப்பட்டுள்ளது.

எனினும், அது நில நடுக்கமா என்பது தொடர்பில் இன்னமும் தெரியவரவில்லை.



# காணாமல்போன நான்கு வயது சிறுவன் வனப்பகுதியிலிருந்து பாதுகாப்பாக மீட்பு!

காணாமல்போயிருந்த 4 வயது சிறுவன், நோர்வூட் டங்கள் வனப் பகுதியில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

லக்ஸபான பகுதியில் இருந்து டங்கள் தோட்டப் பகுதிக்குத் திருமண நிகழ்வொன்றுக்காகப் பெற்றோர் சகிதம் மேற்படி சிறுவன் சென்றுள்ளார்.

அந்தச் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரெனக் காணாமல்போனமையையடுத்து நேற்றுமுன்தினம் மாலை நோர்வூட் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கமைய பொலிஸாரும் பொதுமக்களும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோது குறித்த பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா காட்சிகளின் உதவியோடு சிறுவன் மீட்கப்பட்டார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மீட்கப்பட்ட சிறுவன் டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.




## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஒற்றையாட்சியை...

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதி, நாடாளுமன்றம் வந்து பொருளாதாரத்தை மீட்டெடுக்கப் பல முயற்சிகளை மேற்கொள்வதாகக் கூறி வருகின்ற நிலையிலே இந்த நாட்டைப் பொருளாதார அழிவில் இருந்து மீட்டெடுப்பதற்குச் செய்யப்பட வேண்டிய மிகப் பிரதானமான ஒரு கடமை இருக்கின்றது என்பதை நான் ஜனாதிபதியின் மேலான கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

75 வருடங்களாக இனங்களுக்கிடையிலே இருந்த உறவைச் சீர்குலைத்து துருவமயப்படுத்தப்பட்டுள்ள ஒற்றையாட்சி முறைமையான அரசமைப்பு, இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்துள்ள ஒற்றையாட்சி முறைமையான அரசமைப்பு, இந்த நாட்டினுடைய உயர் நீதிமன்றம் உட்பட சகல நீதிமன்றங்களையும் முடமாக்கியிருக்கின்ற ஒற்றையாட்சி முறைமையான அரசமைப்பு ஒழிக்கப்பட்டு சகல இனங்களும், தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் இந்த நாட்டின் முன்னேற்றத்தில் பங்கேற்கக்கூடிய ஒரு சமஷ்டி அரசமைப்பு கொண்டு வரப்படுவதன் மூலம் மட்டும்தான் அந்த முன்னேற்றத்தை நிரந்தரமாக ஏற்படுத்த முடியும்.

அவ்வாறான முயற்சியை செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னுடைய காலத்தில் இந்த ஒற்றையாட்சி முறைமையின் தோல்வியை ஒப்புக்கொண்டு தமிழ்த் தேசமும், சிங்கள தேசமும் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையிலான சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கொண்டு வருவதற்கும், அதன் மூலம் தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய அபிவிருத்தியிலும், நாட்டின் முன்னேற்றத்திலும் வல்லரசுத் தரத்துக்கு இந்தத் தேசத்தைக் கொண்டு வருவதற்கான பங்களிப்பைச் செய்ய சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதனைச் செய்ய ஜனாதிபதி தயாராக இருக்கின்றாரா என நான் அவரிடம் கேட்க விரும்புகின்றேன்." – என்றார்.

### இறப்பர் தோட்டத்தில்...

தோட்டத்தில் இருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை தோட்டக் காவலாளி மற்றும் தோட்ட அதிகாரி இருவரும் இறப்பர் தோட்டத்தைப் பார்வையிடச் சென்றபோது சடலம் கிடப்பதை அவதானித்தனர். இது தொடர்பில் தோட்ட உயர் அதிகாரிக்கும், பொலிஸாருக்கும் அவர்கள் அறிவித்தனர்.

சடலம் தற்போது பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பிரதீபனின்...

ஒரு கும்பல் தீ வைத்துவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது.

இவ்வாறு தாக்குதல் நடத்திய குழுவினரை அழைத்து வந்து ஊடகவியலாளரின் வீட்டை அடையாளம் காட்டியவர் மற்றும் தாக்குதல் மேற்கொண்ட இருவர் என மூவர் அச்சுவேலிப் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

யார் தலைமையில், எதற்காக இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட குழுவுக்கு வெளிநாடு ஒன்றில் இருந்து பணம் வந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

### சஜித் அணியுடன்...

அதேபோல் தயாசிறி ஜயசேகரவும் சிறு கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளார். அந்த தரப்புகளுடன் அவர் எம்முடன் இணைவார் என நம்புகின்றோம்.

ஒக்டோபர் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கின்றோம்." – என்றார்.



# காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு எதிரான வழக்கு ஓகஸ்ட் 2 இல் பரிசீலனை

மன்னார் - விடத்தல்தீவில் அதானி நிறுவனம் காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை எதிர் வரும் ஒகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி பரிசீலிப்பதற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

விஜித் மலல்கொட, யசந்த கோதாகொட மற்றும் குமுதினி விக்ரமசிங்க ஆகிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அடங்கிய குழாமினால் நேற்று இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வனஜீவராசிகள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாப்பு சங்கம் உட்பட பல தரப்பினரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மத்திய ஆசிய வான்பரப்பில் தெற்கு பயணப்பாதையில் வருடாந்தம் 15 மில்லியன் பறவைகள் சஞ்சரிக்கும் முக்கிய கேந்திரப் பகுதியாக இலங்கை காணப்படுவதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திற்கு பருவகாலத்தில் சுமார் ஒரு மில்லியன் பறவைகள் வருகின்றன எனவும், இந்த பாதையில் ஏதேனும் இடையூறு ஏற்பட்டால், பறவைகளின் நடமாட்டத்தில் குறிப்பிடத்தக்க இடையூறு ஏற்படும் எனவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காற்றாலை திட்டத்திற்கு அரசியல் மற்றும் வெளிப்புற காரணிகளின் அடிப்படையில் மன்னார் தீவு தெரிவு செய்யப்பட்டதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தத் தீவை தெரிவு செய்வதற்கு விஞ்ஞான ரீதியான அல்லது வேறு விசேட காரணம் எதுவும் இல்லை எனவும், இந்த நிலப்பரப்பு மிகவும் உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் பிரதேசம் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின் போது இந்திய அதானி நிறுவனம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரொமேஷ் டி சில்வா ஆஜரானமையுடன் மனுதாரர்கள் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன ஆஜரானார்.

சட்டமா அதிபர் சார்பில் கலாநிதி அவந்தி பெரேரா முன்னிலையாகியிருந்தார்.





# வேலையற்ற பட்டதாரிகளின் ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்கு பொலிஸார் நீர்தாரை பிரயோகம்

நாடாளுமன்ற நுழைவாயில் அருகில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரைக் கலைக்க பொலிஸார் நீர்தாரை மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

விரைவாக தொழில் வாய்ப்புகளை பெற்றுத்தருமாறு கோரி வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, அரச சேவை ஓய்வுபெற்ற தொழிற்சங்க கூட்டமைப்பும் நேற்று பத்தரமுல்லையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டது.

அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 7,000 ரூபா கொடுப்பனவு மற்றும் அக்ரஹார காப்புறுதி கொடுப்பனவு ஆகியவற்றை பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் சண்டப் பிரசண்டம்

சட்டவாக்கம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தை மிக மோசமாக மலினப்படுத்தி, நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக கருத்துரைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நீதித்துறையில் இலங்கை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு நரமாமிசம் உண்ணும் தன்மையைப் போன்றது என்ற சாரப்பட படு கொச்சையாக அவர் விமர்சித்திருக்கின்றார்.

நிறைவேற்றதிகாரம் தனக்குத் தந்திருக்கும் உச்சப்பட்ச அதிகாரங்கள், நாடாளுமன்றச் சிறப்புரிமைகள், பாதுகாப்பு ஆகியவற்றைக் கவசமாக வைத்துக் கொண்டு துள்ளிக் குதித்திருக்கின்றார் அவர் என்றே தோன்றுகின்றது.

இதே ஜனாதிபதிப் பதவியில் இருந்த மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற பிரதமரைத் தவறான முறையில் வீட்டுக்கு அனுப்பி, 52 நாள்கள் முறையற்ற அரசைப் பதவியில் அமர்த்தி, பின்னர் சட்ட விரோதமான முறையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து நடத்திய திருகுதாளங்களுக்கு இப்போது வரிசையாக உயர்நீதிமன்றத்திடம் பாடம் படித்துக் கொண்டிருக்கின்றார். அந்தப் பட்டறிவை இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவை நினைவில் கொள்வது நல்லது.

இப்படி உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தக் கட்டத்தில் - தமது தற்போதைய பதவியின் அந்தத்தில் - திடீரெனப் படுமோசமாக நடந்து கொள்வதின் பின்னால் ஒரு சூத்திரம் - தந்திரம் - பொதிந்திருப்பதாகவே கருதப்படுகிறது.

பாலின சமத்துவச் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது எனத் தெரிவித்து உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புத் தொடர்பாகவே, அதைச் சவாலுக்கு உட்படுத்தும் விதத்தில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தில் காரசாரமான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். அந்தத் தீர்ப்புக்கு எதிராக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து, அதன் மூலம் நடவடிக்கை எடுக்கவும் அவர் தூண்டுதல் போட்டிருக்கின்றார்.

ஏற்கனவே இணையப் பாதுகாப்பு சட்டம், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனப்படுத்தி, அதற்கு முரணாக, நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு மாறாக, நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இப்போது, ஒரு தீர்ப்பைப் புறந்தள்ளி சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்றும் தந்திரோபாயத்தில் நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்ற திட்டத்தை முன்மொழிகின்றார் ஜனாதிபதி. உயர்நீதிமன்றத்தை மிக மோசமாக - கொச்சையாக - விமர்சிக்கின்றார்.

இந்த நகர்வுகளுக்கு பின்னால் இரண்டு உள்நோக்கங்கள்தான் இருக்க முடியும்.

ஒன்று - உயர் நீதிமன்றத்தை அச்சுறுத்தி, மிரட்டி, அடக்கி வைப்பது.

அடுத்தது - தேவைப்பட்டால் உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு மாறாகவும் சட்ட மூலங்கள், அரசமைப்புத் திருத்தங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவோம் என்ற செய்தியை உயர்நீதிமன்றத்திற்கு உரைப்பதும், அத்தகைய அணுகுமுறைக்கான சூழ்நிலையை உருவாக்கி வைப்பதும்.

தன்னுடைய தற்போதைய பதவி காலத்தின் அந்தத்தில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்பதால் தேர்தலை நடத்தாமல் தமது பதவியை ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க முயலலாம் என்ற நிலைமை சூழ்ந்து வருகையிலேயே, மேற்படி இரண்டு முன்னோக்கங்களையும் கொண்ட காய் நகர்த்தல்களை அவர் முன்னெடுக்கின்றார்.

தன்னுடைய பதவி நீடிப்புத் தொடர்பான அரசமைப்புத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அது உயர் நீதிமன்றத்தின் பரிசீனைக்குச் செல்லக் கூடிய வாய்ப்புகள் இருக்கையிலேயே உயர்நீதிமன்றத்தை தமக்கேற்ப பதப்படுத்தும் வகையில் இப்படி நீதித்துறையை மோசமாக - காட்டமாக - அவர் விமர்சிக்கின்றார் என்பது கவனிக்கத்தக்கது.

தமது பதவி நீடிப்புத் தொடர்பான அரசமைப்புத் திருத்தம் வரும்போது ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள் என்ற எச்சரிக்கைத் தொனியும், நீங்கள் எனக்குச் சாதகமாகத் தீர்ப்புத் தராவிட்டாலும் அதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி, சட்டமாக்கி, பதவியில் நீடிக்கும் வலிமை என்னிடம் உள்ளது எனக் காட்டும் சுயதம்பட்டமும்தான் அவரின் நேற்றைய நாடாளுமன்றப் பேச்சில் தொனிக்கிறது என்பது தெளிவு.

# We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

**Walk-in-interview on 22-06-2024**
between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS





Build Your **Dream Home** with us....

**NORTH WALL**
ENGINEERING

"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
**0777 818 208 / 0774 002 766**

**Nelliyady, Jaffna.**



# கம்பன் விழாவில் கௌரவம் பெற்றோர்

(அஷ்ரப் ஏ சமத்)

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்திய கம்பன் விழா -2024 கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி நாள் நிகழ்விக் சான்றோர்கள் கௌரவிப்பு இடம்பெற்றது. எலும்பியர் வைத்திய நிபுணர் டாக்டர் சண்முகம் ஶ்ரீதரன், தமிழறிஞர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், வட மாகாண பிரதம செயலாளர் லட்சுமணன் இளங்கோவன், முன்னாள் தேர்தல் ஆணையர் மஹிந்த தேசப்பிரிய, ஶ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் எம்.பி., கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கம்பன் புகழ் விருது பெறும்தமிழ்நாடு எழுத்தாளர் சிவசங்கரி ஆகியோர் தலைவர் ஈ.கணேஷ் தெய்வநாயகம், மலேசிய எம்.பி. டத்தோ ஶ்ரீசரவணன், புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் வி.பி. சிவக்கொழுந்து ஆகியோர்கள் முன்னிலையில் மாலையிட்டு பொன்னாடை போர்த்தி விருதும் விசேட பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் கம்பவாரிதி இ.ஜெயராஜ், தலைமையில் நீதி மன்ற விவாதம் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு பேராசிரியர் சுல்தான் பர்வினா, வழக்கறிஞர் ஶ்ரீமதி கே சுமதி ஆகியோர்களும் பங்குபற்றி சபையோரை மகிழ்வித்தனர்.














# அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை சந்தி வரையான புதிய ரயில் போக்குவரத்துப் பாதை திறந்து வைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இந்தியாவின் கடனுதவி திட்டத்தின் கீழ் அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை சந்தி வரையான புதிய ரயில் பாதை மற்றும் இலங்கை ரயில்வேத் திணைக்களத்தினால் நவீனப்படுத்தப்பட்ட மிஹிந்தலை ரயில் பாதை போக்குவரத்துக் கட்டமைப்பு ஆகியன நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தனவினால் திறந்து வைக்கப்பட்டது.

சுமார் 15 கிலோ மீட்டர் கொண்ட இந்த ரயில் பாதையில் இரண்டு பாலங்கள் அடங்குகின்றன.

மிஹிந்தலை ரயில் நிலையம், மிஹிந்தலை சந்தி, துணை நிலையம், சமகிபுர மற்றும் அசோகபுர ரயில் நிலையங்கள் இந்த ரயில் பாதையில் அடங்கும்.

மஹறவ ஓமந்த திட்டத்தின் நான்கு கட்டங்களின் கீழ், இந்திய கடன் உதவி திட்டத்தின் கீழ் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ரயில் பாதையின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ரயில் பாதை 1.8 கிலோமீற்றர் ஆகும். அதற்காக செலவிடப்பட்ட தொகை 220 மில்லியன் ரூபாவாகும்.

இத்திட்டத்திற்காக இதுவரையில் ரயில்வே திணைக்களம் 430 மில்லியன் ரூபாவைச் செலவிட்டுள்ளது.

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் ரயில் பாதை திறப்பு விழாவுடன் அநுராதபுரம் உதவி வர்த்தக ஆணையாளர் அலுவலகம் திறப்பு விழாவும், அமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

அநுராதபுரம் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் விசேட நினைவுப் பலகையை திரைநீக்கம் செய்த அமைச்சர் மற்றும் அதிதிகள் அநுராதபுரத்திலிருந்து மிஹிந்தலை வரையிலான புதிய ரயில் பாதையின் அங்குரார்ப்பண பயணத்தில் இணைந்து கொண்டனர்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ரூபசிங்க, ரயில்வேயின் பதில் பொது முகாமையாளர் எஸ். எஸ். முதலிகே, முன்னாள் அமைச்சர் எச்.பி சேமசிங்க, வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் எஸ். எம். ரஞ்சித் சமரகோன், ரயில்வேத் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், பிரதேச அரச உயர் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# கூட்டமைப்பினருக்கு வழங்கப்படும் பெட்டிகள்தான் தமிழ் மக்களின் வாக்குகளைத் தீர்மானிக்கின்றனவா?

## இப்படிக் கேள்வி எழுவதாகக் கூறுகின்றார் ஈ.பி.டி.பியின் சிறீரங்கேஸ்வரன்




2015 இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கும்போது இன்று கூறும் நிபந்தனையை சம்பந்தன் ஏன் நிபந்தனையாக முன்வைக்கவில்லை என கேள்வி எழுப்பியுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் தமிழ் மக்களின் வாக்குகளை கூட்டமைப்பினருக்கு வழங்கப்படும் பெட்டிகள் தான் தீர்மானித்தனவா என்கின்ற சந்தேகமும் எழாமலில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதித் தேர்தல் அண்மித்துவரும் சூழலில் இணைந்த வடக்கு – கிழக்கில் சமஷ்டு அடிப்படையிலான அதி உச்சமான அளவில் அதிகாரம் பகிரப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் தமிழரசுக் கட்டசியின் சிரேஷ்ட தலைவருமான இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

ஆனால் இக்கோரிக்கையை கடந்த 2015 இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கும்போது ஏன் நிபந்தனையாக அவர் முன்வைக்கவில்லை என்ற கேள்வி தமிழ் மக்களிடையே இன்று எழுகின்றது.

இதேநேரம் எதிர்வரும் செப்ரம்பர் 17 இக்கும் ஒக்ரோபர் 16 இக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் எனர் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் – தேர்தலில் மும்முனை போட்டிக்கான சூழல் காணப்படும் நிலையில் – சுயநிர்ணயம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வாக எவ்விதமான விடயங்களையும் கருமங்களையும் வேட்பாளர்கள் முன்வைக்கப் போகின்றார்கள் என்பதை அவர்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் வெளிப்படுத்த வேண்டும் எனவும், அதுமட்டுமன்றி தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியிலும் அவ்விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது

அவ்வாறாயின் சம்பந்தன் 2015 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது ஏன் இதனை வலியுறுத்தவில்லை?

இதேநேரம் முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 30 கோடி ரூபா வழங்கியே தமிழ் மக்களை மைத்திரிக்கு வாக்களிக்குமாறு கோரியதாக தெரிவித்திருந்தார்.

இதேநேரம் அவரது இந்தக் கூற்றை கூட்டமைப்பினர் எவரும் மறுத்திருக்கவும் இல்லை.

அத்துடன் தமிழ் மக்களின் வாக்குகளை கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்ட பெட்டிகள்தான் தீர்மானித்தனவா என்கின்ற கேள்வியும் எழாமலில்லை.

இதேவேளை தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக அண்மையில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், துரோகி என பட்டம் சூட்டுவார்கள் என்று அஞ்சி உண்மையை மறைக்கமாட்டேன் எனவும் பொது வேட்பாளர் என்பது ஒரு விஷப்பரிட்சை எனவும் கூறியிருந்தார்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக தீவிரமாக பிரசாரத்தை மக்களிடத்தே எடுத்துச் செல்லப்போகிறார் எனவும் அவர் கர்ஜனை செய்திருந்தார்.

பின்னர் வவுனியாவில் அவர்களது கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில் இதுபற்றி முடிவெடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

பொதுவேட்பாளர் என்ற விடயம் நடைமுறைச் சாத்தியமற்றது.

இதனால்தான தமிழ் கட்சிகளுக்குள் பொது இணக்கப்பாடும் ஒற்றுமையின்மையும் காணப்படுகின்ற சூழலில் பொது வேட்பாளர் விடயம் என்பது சாத்தியமற்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் சாணக்கியத்தின் மூலம் தெரிவித்திருந்தார்.

அதேநேரம் தமிழ் பொது வேட்பாளராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் பெண் அமைச்சர் ஒருவரும் வடக்கு மாகாண சபையின் மற்றொரு முன்னாள் உறுப்பினரான சிவாஜிலிங்கமும் களமிறங்கத் தயாரென அறிக்கை விட்டுள்ளனர். இவர்களைத் தமிழ் மக்கள் கணக்கில் எடுக்கப்போவதில்லை.

அதேநேரம் இவர்களது பின்னணிகள் எதுவாக இருந்தன என்பதை கடந்தகால பதிவுகள் இதற்கு சான்றாகவும் உள்ளன.

ஆயினும் எமது அன்றாடப் பிரச்சினை, அபிவிருத்தி, அரசியலுரிமை போன்றவற்றை எவ்வாறு முன்னெடுப்பது என்கின்ற அடிப்படையில் தமிழ் மக்கள் ஒரு தீர்க்கமான வழிகாட்டலை எதிர்பார்த்துள்ளார்கள்.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதுபோன்று பொய்களுக்கு மக்கள் இடங்கொடுக்காது, வெளிப்படையான உண்மைகளை இனங்கண்டு, எதிர்காலத்தை வெற்றிகொள்ள வேண்டும். அதுவே தமிழ் மக்களின் எதிர்காலத்திற்கு அவசியமானதுமாகும்.

ஆகவே இவர்களுடைய பொது வேட்பாளர் என்ற விடயமோ அல்லது சம்பந்தனுடைய திடீர் கரிசனையையோ மக்கள் தெளிவாக தெரிந்து வைத்திருப்பார்கள் என்றும் சுட்டிக்காட்டிய அவர், கடந்த காலங்களில் ஈ.பி.டி.பி. கூறிய அல்லது முன்வைத்த விடயங்களே நடைமுறை சாத்தியமானதாகி வருகின்றன. என்றும் தெரிவித்தார்.

# உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை சபையில் அறிவித்தார் சபாநாயகர்


தொலைத்தொடர்புகள் திருத்தச் சட்டமூலம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்மானங்களை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசமைப்புடன் இணங்கவில்லை என உயர் நீதிமன்றம் தமக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள விதத்தில் சட்டமூலம் திருத்தப்பட வேண்டும் என சபாநாயகர் நாடாளுமன்றுக்கு அறிவித்தார்.

அத்துடன், இந்த சட்டமூலத்தின் சில சரத்துகள் விசேட பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் இதன்போது குறிப்பிட்டார்.






# புனித பத்திரிசியார் கல்லூரியில் நடந்த சர்வதேச மாணவர் உளவியல் செயலமர்வு

சர்வதேச மாணவர் உளவியல் செயலமர்வு புனித பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை முதல்வர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஆசிய பசுபிக் பாடசாலைகள் உளவியல் அமைப்பில் செயற்படும் மலேசியா, இந்தியா, சிங்கப்பூர், பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வருகை தந்த பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் கலந்து கொண்டு நிகழ்வை நெறிப்படுத்தினர்.

யாழ் மாவட்ட பாடசாலைகளில் இருந்து பலநூறு மாணவர்கள் கலந்துகொண்டு பலன் பெற்றனர். இந்த நிகழ்வில் பாடசாலைகளில் உள ஆற்றுப்படுத்தலுக்குப் பொறுப்பான ஆசிரியர்களும் கருத்துரை வழங்கினர்.

இச் செயலமர்வில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பாடசாலையில் புத்தகக் கல்வி சுமையாக இருக்கும் உயர்தரப் பிரிவு மாணவர்கள் வாழ்க்கையின் யதார்த் தங்களைப் புரிந்து கொண்டு தம் வாழ்வை சரியான வழியில் நெறிப்படுத்தவும் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் இச் செயலமர்வின் ஊடாக, மாணவர்கள் வழிகாட்டலைப் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட குரு முதல்வர் உட்பட ஏனைய கல்வி உளவியல் சார் ஆசிரியர்களும், மதகுருமார்களும் கலந்து சிறப்பித்தனர்.











# கதிர்காமத்துக்கான காட்டுப்பாதை திறக்கும் சர்ச்சை: ஆலையடிவேம்பில் நேற்றுக் கவனவீர்ப்புச் செயற்பாடு

(எம்.எம்.றம்ஸீன்)

கதிர்காம பாதயாத்திரை காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்து ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினர் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புச் செயற்பாட்டை மேற்கொண்டிருந்தனர்.

தொடர்ந்து ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தங்களின் கோரிக்கை அடங்கிய மகஜரை அவர்கள் கையளித்தனர்.

கதிர்காமம் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆலயம் நோக்கிய பாத யாத்திரையை மக்கள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 30ஆம் திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப்பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு, ஜுலை 11ஆம் திகதி மூடப்படுவதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் உகந்தை முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து, கதிர்காமம் ஆலயத்தில் கடந்த 10ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உகந்தை காட்டுப் பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு, எதிர்வரும் ஜுலை மாதம் 02ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு, 14ஆம் திகதி மூடப்படவுள்ளதாக மொனராகலை மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 30ஆம் திகதியினை கருத்திற்கொண்டு பக்தர்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், இந்த திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தினை ஏற்படுத்தியுள்ளதாக சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

காட்டு வழியாக பாதயாத்திரை மேற்கொள்ள தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளதாகவும் பல சமூக அமைப்புகள் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்து வருகிறார்கள்.

அந்த வகையில் ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களும் கதிர்காம காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்தும் அந்தத் தீர்மானத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியுமே கவனவீர்ப்பு நேற்று முன்னெடுக்கப்பட்டது.








# காட்டுப் பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும் நிகழ்வில் கிழக்கு ஆளுநரும் பங்குபற்றுவார்

(வி.ரி.சகாதேவராஜா)

கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை எதிர்வரும் 30 ஆம் திகதி திறக்கப்படும். அதனைத் திறந்து வைக்க கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் வருகை தரவிருக்கிறார்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம தன்னைச் சந்தித்த

ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தினரிடம் தெரிவித்தார்.

இச் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றிய தலைவர் மு.வடிவேல், செயலாளர் எஸா.செல்வானந்தன், பொருளாளர் இ.ஜெகநாதன்(குமார்) உள்ளிட்ட பிரதிநிதிகள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதன் போது குழுவினர் பத்து நாள்களுக்கு முன்னரே – அதாவது வரும் 25 ஆம் திகதி – காட்டுப் பாதை திறக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு பதிலளித்த அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம மேற்படி பாதை 30 ஆம் திகதி திறக்கப்படும் என்றும் அதற்கு ஆளுநர் வருகை தருவார் என்றும் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜனையும் குழுவினர் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதேவேளை கதிர்காம பாதயாத்திரைக்கான காட்டுப்பாதை திறக்கும் திகதியில் மாற்றம் ஏற்பட்டமையை கண்டித்து ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்றுக் காலை 10.45 மணியளவில் கவனயீர்ப்பு செயற்பாடு இடம்பெற்றது.





# சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண் சித்திரவதைக்குள்ளாகிறார் எனத் தகவல்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்ணாகப் பணி புரியும் இலங்கைப் பெண் ஒருவர் தனது சேவைக் காலம் முடிவதற்குள் தாம் பணிபுரியும் வீட்டில் குடியிருப்பவர்களால் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளானதால், தம்மை விரைவில் இலங்கைக்கு அழைத்துவருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹொரவ்பொத்தானை – வில்வாவ பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய இந்தப் பெண், ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் வீட்டு வேலைக்காக சவூதி அரேபியா சென்றுள்ளார்.

எனினும் தான் பணிபுரியும் வீட்டின் உரிமையாளர்கள் தன்னைப் பல்வேறு விதங்களில் சித்திரவதை செய்கின்றனர் என தொலைபேசியில் தனது குடும்ப உறுப்பினர்களை தொடர்பு கொண்டு அவர் தெரிவித்துள்ளார்.



# பிரதான, புத்தளம் மார்க்கங்களில் ரயில் சேவைகளில் பாதிப்பு நிலை

பிரதான மற்றும் புத்தளம் மார்க்கங்களில் ரயில் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வேத்தி ணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த மார்க்கங்களில் பயணிக்கும் 3 ரயில்கள் தொழில்நுட்பக் கோளாறுக்குள்ளாகிய காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

மீரிகம மற்றும் வெயாங்கொடை இடையே ரயிலொன்றும், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தினருகே அலுவலக ரயிலொன்றும், புத்தளம் மார்க்கத்தில் பயணிக்கும் ரயிலொன்று நீர்கொழும்பு ரயில் நிலையத்திற்கருகிலும் தொழில்நுட்பக் கோளாறுக்கு உள்ளாகியுள்ளாகியுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி ரயில்களை மீள செயற்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# சட்டமா அதிபரின் பதவியை நீடிப்பதற்கு அரசமைப்புக் கவுன்ஸில் அனுமதி மறுப்பு

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்னத்தின் பதவிக் காலத்தை நீடிப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அரசமைப்புக் கவுன்ஸில் அனுமதி மறுத்துள்ளது.

2021 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி சட்டமா அதிபராக சத்தியப் பிரமாணம் செய்த சஞ்ஜய் ராஜரத்னத்தின் பதவி காலம் எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.


இந்த நிலையில் அவருக்கு மேலும் 6 மாதங்களுக்கு சேவை நீடிப்பை வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரை செய்திருந்தார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் ஆராய்வதற்காக இரண்டாவது முறையாக அரசமைப்புக் கவுன்ஸில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுப் பிற்பகல் கூடியது.

இதன்போது, ஜனாதிபதியின் பரிந்துரை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்கு அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பும் நடத்தப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின் போது, ஜனாதிபதியின் பரிந்துரைக்கு எதிராக 05 வாக்குகளும், ஆதரவாக 03 வாக்குகளும் கிடைத்துள்ளன.

அதன்படி, சட்டமா அதிபர், ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினத்தின் பதவிக்காலம் இன்னும் எட்டு நாள்களில் நிறைவடையவுள்ளது.



# மின் கட்டணத் திருத்தம் ஜூலை 15 இல் அறிவிப்பு



இந்த வருடத்தில் 2 ஆவது தடவையாக மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களிடம் ஆலோசனைகளை கோரியுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவு தொடர்பான பொதுமக்களின் எழுத்து பூர்வ கருத்து மற்றும் ஆலோசனைகள் எதிர்வரும் ஜூலை 8 ஆம் திகதி வரையும், வாய்மூல கருத்து எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதியும் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பொதுமக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டதன் பின்னர் மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி முடிவு, ஜூலை மாதம் 15 ஆம் திகதியன்று அறிவிக்கப்படும் என இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருப்போரில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரிவிலக்கு வழங்கப்படும்

## நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

"இலங்கையில் அடுத்த ஆண்டு அறிமுகமாகவுள்ள சொத்துவரியில், ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகளை வைத்திருப்போரில் ஒரு வீட்டுக்கு மாத்திரமே வரிவிலக்கு வழங்கப்படும். இதன்மூலம் 90 சதவீதமானவர்களுக்கு வரி அமுலாக்கப்படாது. எனவே இது தொடர்பாக நாட்டின் பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய விசேட உரையின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

"உத்தேச வாடகை வருமான வரி குறித்தும் இந்த சபைக்குக் கருத்தைத் தெரிவிக்க வேண்டும். நாம் செல்வ வரியொன்றை அறிமுகப்படுத்துகிறோம். மேலும் அதன் வரையறை மிக அதிகமாக இருக்கும். எனவே, நாட்டின் 90 வீத வீடுகளுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே இதைப் பற்றி பொதுமக்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் வீடு பாதுகாப்பாக இருக்கும்.

ஆனால், தரவரிசையின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் வாடகை வருமான வரி விதிக்கிறோம். அதன் பிறகு எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. அந்த மதிப்பீடுகள் மாகாண சபைகளுக்கு சொந்தமானது. தரவரிசைப் பட்டியலின்படி இந்த வரி விதிக்கப்பட்டால், பெறப்படும் பணம் மாகாண சபைக்கு சொந்தமானது என்று நீதிமன்றம் கூறலாம். எனவே, அதற்கான அனுமதியை நாடாளுமன்றத்தில் பெற வேண்டும். எனவே வாடகை வருமான வரி என்ற வித்தியாசமான சூத்திரத்தைப் பயன்படுத்தியுள்ளோம். இந்த வருமான வரி மத்திய அரசுக்குச் சொந்தமானது.

நாங்கள் பொதுவாக இந்த மதிப்பீடுகளைப் பயன்படுத்துகிறோம். தற்போதுள்ள சட்டச் சிக்கலைத் தீர்க்கவே இதைச் செய்தோம். ஆனால் வரி வரையறை மிக அதிகம் என்பதை குறிப்பிட வேண்டும். இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் தங்கள் வீடுகளைப் பற்றி கவலைப்பட வேண்டி ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் நாம் செல்வ வரி விதிக்க வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள பல கோடீஸ்வரர்கள் தங்களுக்கும் வரி விதிக்கப்படுமோ என்று மிகவும் கவலைப்படுவதையும் நான் அறிவேன்.

மேலும், மக்களின் இறையாண்மை பேணப்பட வேண்டும். அந்த இறையாண்மை நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதியிடம் உள்ளது. இந்த நேரத்தில் இரண்டு நிறுவனங்களும் ஒரே இடத்தில் உள்ளன. நாடாளுமன்றத்தின் மூலம் நீதித்துறைக்கு அதிகாரம் கிடைத்துள்ளது. அதைத்தான் 1971 தேர்தலில் முடிவு செய்தோம். 1967 இல் லியனகேவுக்கு எதிரான ரெஜினி வழக்கில், உயர் நீதிமன்றத்திற்கே இந்த அதிகாரங்கள் உண்டு என அறிவிக்கப்பட்டது.

இது குறித்து பாரிய விவாதங்கள் இடம்பெற்றன. இதனை 2/3 வாக்குகளால் மாற்ற முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள நாங்கள் தெரிவித்தோம். ஆனால் 2/3 ஐ வைத்து அதனை செய்ய முடியாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. ஆனால் 1970 இல், 2ஃ3 அந்த குழுவிற்கு கிடைத்தது. அதன்படி, இந்த அதிகாரம் அரசமைப்புச் சபையால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு மூலம் கிடைக்கிறது என்பதை நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டோம். அந்த அதிகாரத்தை மக்கள் இறையாண்மை பெற்றுக்கொண்டது. நாங்கள் இதுவரை அதை மாற்றவில்லை.

ஆனால் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பில் மக்கள் இறையாண்மைக்காக மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு கொண்டு வந்தோம். எனவே, இந்தச் சபையின் உரிமைகளில் நான் தலையிட விரும்பவில்லை. 1978 இல் நீதித்துறையின் சுதந்திரத்தை மேலும் வலுப்படுத்தினோம். இந்த வழக்கில், நீதிமன்றத்தின் அதிகாரத்தை நீதிமன்றம் எடுத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் இந்த நாட்டின் சட்டங்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்றன. அது தொடர்பில் யாரும் கேள்வி கேட்க முடியாது.

எனவே, சட்டம் அரசமைப்புக்கு முரணானதா இல்லையா என்பதை மாத்திரமே பரிந்துரைக்க வேண்டும். நாம் அரசமைப்பு நீதிமன்றத்தை நிறுவியுள்ளோம். நியூசிலாந்து, பின்லாந்து போன்ற நாடுகளில், சட்டங்கள் அரசமைப்புக்கு இசைவாக உள்ளதா இல்லையா என்பது, நாடாளுமனறத் தெரிவுக்குழுவால் முடிவு செய்யப்படும்.

பின்னர் 1978 இல் இதற்கு தனி நீதிமன்றம் தேவையில்லை என்றும், அதனால் பண விரயம்தான் ஏற்படும் என்றும் முடிவு செய்தோம். உயர்நீதிமன்றத்தை மேலும் பலப்படுத்தி நாடாளுமன்றம் சார்பில் அதிகாரத்தை வழங்கியதையே நான் செய்துள்ளேன்.

நீதிமன்றம் வழங்கும் தீர்மானத்தின் மீது அமைச்சரவை முடிவெடுக்க முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு மற்ற கட்சியினர் பல்வேறு கருத்துகளையும், எதிர்ப்புகளையும் தெரிவித்தனர்.

ஆனால் ஒரு குழு மூலம் முடிவு எடுக்கப்பட்டது. எவ்வாறேனும் நீதிமன்றத்திற்குச் செல்லப்பட்டது. நீதிமன்றம் அதை உறுதி செய்தது. அதன்பிறகு, அரசாங்கத்தைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை.

கடந்த காலத்தைப் பற்றிப் பேச நான் இங்கு வரவில்லை. எனக்கு அது தேவையில்லை. ஆனால் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டபோது யார் கதைத்தார்கள் என்று தேவைப்பட்டால் என்னால் கூற முடியும். அதையெல்லாம் மறந்துவிட்டு நாம் கலந்துரையாடி முன்னோக்கிச் செல்லலாம். இங்கு அடிப்படைவாதம் தேவையில்லை." – என்றார்

# ஆயுர்வேத பட்டதாரிகளின் பயிற்சி மீண்டும் ஆரம்பம்

## சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவிப்பு



"நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலை காரணமாக தடைப்பட்டிருந்த ஆயுர்வேத பட்டதாரிகளின் பயிற்சி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"சுதேச வைத்திய அமைச்சு என்ற வகையில் நாம் இது வரை பெரும் வெற்றியைப் பெற்றுள்ளோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட பல்வேறு நெருக்கடிகள் காரணமாக பல்கலைக்கழகங்களில் இருந்து சித்தியடைந்த ஆயுர்வேத பட்டதாரிகளின் தொழிற்பயிற்சி தாமதமானது. அதன்படி, ஜூன் 3 ஆம் திகதி முதல் ஆயுர்வேத, சித்த மற்றும் யூனானி பட்டதாரிகள் 207 பேருக்கு 67,500 ரூபாய் மாதாந்தக் கொடுப்பனவுடன் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 153 பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்குள் ஆரம்பிக்கப்படும். அதன்படி 418 பட்டதாரிகளுக்கு ஆயுர்வேத திணைக்களம் பயிற்சி அளித்து வருகிறது. இதற்காக அரசாங்கம் 320 மில்லியன் ரூபாவைச் செலவிடுகிறது.

சுதேச வைத்திய அமைச்சும், ஆயுர்வேத திணைக்களமும் இணைந்து தற்போது பாரம்பரிய வைத்தியர் பதிவுகளை எமது நாட்டில் விரிவுபடுத்தி வருகின்றன. அதன்படி, எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதி வரை பதிவுக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் உள்ளது.

தற்போது பல்வேறு தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளன. கடமைகளை நிறைவேற்றுவதை விடுத்து தமது சலுகைகளுக்காகவே செயற்படுகிறார்கள் என்றே கூற வேண்டும். இப்படிப்பட்டவர்கள் நாட்டின் எதிர்காலத்தை இருளாக்குகிறார்கள்.

மேலும், நம் நாடு ஜப்பான் போன்று மாற வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஜப்பானியர்களைப் போல செயற்பட விரும்புவதில்லை. ஆஸ்திரேலியாவில் உள்ளது போன்ற கல்வி முறை இருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆஸ்திரேலியாவில் இருப்பது போன்ற பல்கலைக்கழகங்களை இங்கே நிறுவ விரும்பவில்லை.

எமது பெற்றோர் தமது சொத்துக்களை விற்றுப் பிள்ளைகளின் கல்விக்காக வெளிநாடுகளுக்கு அனுப்ப முயற்சிக்கின்றனர். இதற்குக் காரணம், நம் நாட்டில் பல்வேறு மாணவர் சங்கங்கள், மாணவர் போராட்டங்களை நடத்தி கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வாய்ப்பளிப்பதில்லை. எனவே இவ்விடயத்தில் மக்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்." – என்றார்.

# அரவிந்தனை விடுவிக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகள்




பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணை என்ற பெயரில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரவிந்தனையும் ஏனைய அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணம் நகர் எங்கும் போராளிகள் நலன்புரிச்சங்கத்தினரால் பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.



# விக்கிரவாண்டி தொகுதியில் இருந்து அமைச்சர்கள் வெளியேற வேண்டும்

## பா.ம.க. புகார் மனு



விக்கிரவாண்டி தொகுதி இடைத் தேர்தல் ஜனநாயக முறையில் நடைபெற, தொகுதியில் தங்கி தேர்தல் பணியாற்றும் 9 அமைச்சர்கள் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என பா.ம.க. சார்பில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் யுவராஜிடம் வழக்கறிஞர் பாலு புகார் அளித்துள்ளார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பா.ம.க. போட்டியிடுகிறது. தேர்தல் பணியை நாங்கள் துவக்கி உள்ளோம். இடைத்தேர்தல் பணியில் ஆளுங் கட்சியின் அத்துமீறல் அதிகரித்து வருகிறது. இந்த இடைத் தேர்தலை நியாயமாகவும், நேர்மையாகவும் ஜனநாயக முறைப்படி நடத்த முடியாத சூழ்நிலையை தி.மு.கவின் செயல்பாடுகள் உருவாக்கி உள்ளது.

9 மூத்த அமைச்சர்களை களத்தில் இறக்கி, பல்வேறு பகுதிகளைப் பிரித்து தேர்தல் பணியில் அவர்களை ஈடுபடுத்தி உள்ளனர். தேர்தல் முடியும் வரை அவர்கள் தொகுதியில் தங்கி இருந்து தேர்தல் பணியாற்றுவார்கள் என்று தி.மு.கவின் அதிகாரப்பூர்வமான இணையதளத்தில் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் பணியில் ஈடுபட்டுள்ள 9 அமைச்சர்களும் அடுத்து வரும் 25 நாள்களுக்கு தொகுதியில் தங்கியிருந்து தேர்தல் பணியாற்றினால், ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த முடியாத சூழல் ஏற்படும். அமைச்சர்கள் பிரச்சாரம் செய்ய கூடாது என்பது அல்ல எங்களுடைய நோக்கம். நாங்கள் அதற்கு தடையும் விதிக்கவில்லை. அமைச்சர்கள் தொகுதியில் தங்கியிருந்து முகாம் அலுவலகத்தை அமைத்து அரசு அதிகாரிகளின் படைபலத்துடன் வாக்காளர்களை சந்திப்பதும், தேர்தல் பணியாற்றுவதும் ஒரு நியாயமான தேர்தல் முறையாக இருக்காது என்பதன் அடிப்படையில்தான் இங்குள்ள 9 அமைச்சர்களையும் தொகுதியில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கூறுகிறோம் .

எக்காரணத்தைக் கொண்டும் தேர்தல் ஆணையம் அமைச்சர்கள் தங்கி பணியாற்றுவதை அனுமதிக்க கூடாது என்று தேர்தல் அலுவலரிடம் புகார் தெரிவித்துள்ளோம். இப் புகார் மனுவை இந்திய தேர்தல் ஆணையருக்கும், தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கும் அனுப்பி உள்ளோம்.

எனவே, அமைச்சர்கள் தங்களுடைய அமைச்சரவைப் பணிகளை மேற்கொள்ளாமல் 25 நாள்களுக்கு தங்கி இருப்பதை அனுமதிக்ககூடாது. அமைச்சர்கள் தங்கியிருந்து தேர்தல் பணி செய்வது தேர்தல் விதிகளுக்கு புறம்பானது. எனவே, அவர்களை

# 2026 சட்டமன்ற தேர்தலுக்கு தயாராகும் வகையில் விரைவில் மக்களை சந்திக்கவுள்ளார் விஜய்



2026 சட்டமன்ற தேர்தலுக்கு ஆயத்தமாகும் வகையில், நடிகர் விஜய் விரைவில் மக்களை சந்திக்க திட்டமிட்டு வருகின்றார் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழகம் முழுவதும் மக்கள் சந்திப்பு பயணங்கள் மூலம் விஜய் மக்களை சந்திக்கவுள்ளார் என கூறப்படுகிறது. மேலும், கட்சியின் கொள்கை பற்றிய தகவல்கள் கட்சியின் முதல் மாநாட்டில் வெளியிடப்பட இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ஏற்கனவே , 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் போட்டியிடுவதில் மட்டுமே கவனம் செலுத்துவதாக தமிழக வெற்றிக் கழகம் அறிவித்து இருந்தது. இடையில் வரும் ஏனைய தேர்தல்களில் தமிழக வெற்றிக் கழகம் போட்டியிடாது என்றும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் பெய்யும் கனமழை; மீனவர்கள் கடலுக்குச் செல்ல தடை



சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடும் மழை பெய்துள்ளது. இதனால், பொதுமக்கள், வாகனங்களில் செல்வோர் கடும் சிரமங்களுக்கு ஆளாகியுள்ளனர்.

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 48 மணி நேரத்துக்கு இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை மையம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், சென்னையில் கனமழை பெய்து வருகிறது. சென்னை அண்ணா சாலை, கீழ்ப்பாக்கம், நுங்கம்பாக்கம், நந்தனம், அண்ணாநகர், வடபழனி, கிண்டி, மீனம்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் கனமழை பெய்துள்ளது.

அதே போல சென்னை புறநகர் பகுதிகளான பூந்தமல்லி, திருவேற்காடு, ஆவடி, அம்பத்தூர், அனகாபுத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்துள்ளது.

இதனால், வீதிகளில் ஆங்காங்கே தண்ணீர் தேங்கியுள்ளது. அண்ணா சாலை, ஜி.எஸ்.டி. சாலை உள்ளிட்ட வீதிகளில் சில இடங்களில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, வானிலை முன்னெச்சரிக்கை காரணமாக ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் செல்ல மீன்வளத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

மன்னார் வளைகுடா அதனை ஒட்டிய தென்தமிழக கடலோரப்பகுதிகளில் வேகமாக காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால், ராமேசுவரம் மீனவர்கள் இன்று இரவு வரையிலும் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என மீன்வளத் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர்.



# தென் சீன கடலில் மோதிக்கொண்ட சீன - பிலிப்பைன்ஸ் கப்பல்கள்

சர்ச்சைக்குரிய தென் சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் மீது, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் மோதியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் தோமஸ் மணல்திட்டுப் பகுதியை நோக்கி, கட்டுமானப் பொருள்களுடன் நேற்று பயணித்த பிலிப்பைன்ஸ் கப்பலை, சீன கடலோரக் காவல் படைக் கப்பல் தடுத்து நிறுத்த முயற்சி செய்துள்ள நிலையில், இரு கப்பல்களும் மோதிக் கொண்டன என சீன கடலோரக் காவல் படை தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் பாதிப்புக்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையில், கப்பல்கள் மோதிக் கொண்டதை உறுதிப்படுத்தியுள்ள பிலிப்பைன்ஸ், வழக்கம்போல் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டுதான் தங்களது கப்பல் சென்றதாக கூறியுள்ளது.

தென் சீன கடலின் ஏறத்தாழ அனைத்து பகுதிகளுக்கும் சீனா உரிமை கொண்டாடிவருகிறது.

இருந்தாலும், அந்தக் கடல் பகுதியில் தங்களுக்கும் உரிமையுள்ளதாக பிலிப்பின்ஸ், மலேசியா, மற்றும் தாய்வான் ஆகிய கூறிவருகின்றன.

இதன் காரணமாக அந்த நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே பதற்றம் நீடித்து வருகிறது.

இதற்கு முன்னரும், குறித்த கடல் பகுதியில் சீன – பிலிப்பைன்ஸ் கப்பல்கள் மோதிக் கொண்ட சம்பவங்கள் பல முறை நடந்தேறியுள்ளதாகவும், இதில் கப்பல்கள் சேதமடைந்ததுடன் சிலர் காயமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

குறிப்பாக, தென் சீன கடலில் அமைந்துள்ள இரண்டாம் தோமஸ் மணல்திட்டுப் பகுதிக்கு சீனா, பிலிப்பின்ஸ் ஆகிய இரு நாடுகளுமே உரிமை கொண்டாடி வருகின்றன.

அந்த மணல் திட்டுப் பகுதியில் பிலிப்பைன்ஸ் வேண்டுமென்றே தனது கடற்படைக் கப்பலை கடந்த 1999 இல் மோதியதாகவும், இதில் சேதமடைந்த அந்தக் கப்பலை அங்கேயே நிரந்தரமாக வைத்து அதில் படைவீரர்களையும் பிலிப்பைன்ஸ் நிறுத்தியுள்ளதாகவும் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தச் சூழலில், தென் சீன கடல் பகுதிக்கு நுழையும் கப்பல்களை நோக்கி சுடவும் அந்தக் கப்பல்களில் இருப்பவர்களை கைது செய்து 60 நாள்கள் வரை காவலில் வைத்திருப்பதற்கும் வகை செய்யும் புதிய விதிமுறைகளை சீனா கடந்த சனிக்கிழமை அறிவித்தது.

சீனாவின் இந்த விதிமுறைகளை புறக்கணிப்பதாக பிலிப்பைன்ஸும் தெரிவித்திருந்தநிலையில், தற்போது, இரு நாட்டுக் கப்பல்களும் மோதிக் கொண்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## ஈரானில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்: 4 பேர் உயிரிழப்பு; 120 பேர் காயம்

ஈரானின் வடகிழக்கு நகரமான காஷ்மரில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் 4 பேர் உயிரிழந்துள்ளனர். 120 பேர் படுகாயமடைந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 4.9 ஆக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் நாட்டு நேரப்படி மதியம் 1.24 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதன்போது கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் அந்தக் பகுதியில் இருந்து வெளிய நிலையில் சில இடங்களில் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளன என கூறப்படுகிறது.

## 5 லட்சம் புலம்பெயர்ந்தோருக்கு அமெரிக்காவில் குடியுரிமை



அமெரிக்க குடிமக்களை சட்டவிரோதமாக திருமணம் செய்து கொண்டுள்ள சுமார் 5 லட்சம் புலம்பெயர்ந்தோருக்கு குடியுரிமை வழங்கும் திட்டத்தை ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிக்கவுள்ளார்.

வெள்ளை மாளிகை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

குடியரசுக் கட்சியின் போட்டியாளரான டொனால்ட் ட்ரம்பின் இவ்வாறான குடிமக்களை நாடு கடத்தும் திட்டத்துக்கு இது முரணான திட்டமாகும்.

இந்த திட்டத்தின் மூலம் நேற்றுமுன்தினம் வரை குறைந்தபட்சம் 10 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசிக்கும் 5 லட்சம் பேர் சலுகை பெறுவார்கள் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இந்தத் திட்டம் அமெரிக்கர்களை திருமணம் செய்தவர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் நிரந்தர வதிவிடத்திற்கு விண்ணப்பிக்க அனுமதிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 19.06.2024



## மேஷம்

இன்று ஆக்க பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## ரிஷபம்

இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.

இன்று கண் சம்பந்தமான பிரச்சினைகளும் முதுகு வலியும் ஏற்படலாம்.



## மிதுனம்

உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.



## கடகம்

நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்த நேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்து கொள்ளுங்கள்.



## சிம்மம்

உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.



## கன்னி

முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.



## துலாம்

உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையைப் புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.

பதற்றத்தைத் தள்ளி வைப்பதன் மூலம் நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்கலாம்.



## விருச்சிகம்

இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள் அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களைத் தவிர்க்கலாம். அதனால் பதற்றமின்றிக் காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் – மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள். என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 19.06.2024

## தனுசு

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்துக்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல்படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவுக்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.

## மகரம்

நீண்ட கால திட்டங்ககளை அமைப்பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரியங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள் பணியில் மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறையில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

## கும்பம்

இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திறமையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதற்றமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.

## மீனம்

இன்று கவனமாகவும் சாமார்த்தியமாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெரும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும். உங்கள் பணிகளின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளாதீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும்.

Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living
OUR ONGOING PROJECTS
No.06, 19th Lane, Colombo 03.
No. 15A, Layards Rd, Colombo 04.
No.30, Hotel Road, Mount Lavinia.
No. 02, Glenfall Road, Nuwara Eliya.
No.01, Havelock Place, Colombo 05.
No. 34/2, De Saram Road, Mount Lavinia.
No. 358, High Level Road, Nugegoda.
No. 35, Ramakrishna Road, Colombo 06.
Blue Ocean Group of Companies
KELSEY HOMES 40 Years Housing Excellence
+94 777 546 546 | +94 770 774 774
LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA
No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park